மகாஜோதி தமிழ்ப்பள்ளி

6 ஞானஜோதி

16.12.2020

**<u>சூழலுக்கு ஏற்ற பழமொழியை தேர்ந்தெடுக.</u>**

1. நகுலன் தினமும் காலைச் சிற்றுண்டியை உண்ட பிறகே பள்ளிக்குச் செல்வான். உடல் நலமாகா இருந்தால்தான் சிறப்பாகக் கல்வி கற்க முடியும் என்பதை நன்கு உணர்ந்திருந்தான்.

2. சிறு வயதிலிருந்தே தந்தை அளித்த நம்பிக்கையும் ஆதரவும் கனிமொழி விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க உந்துதலாய் இருந்தன.

3. நீச்சல் வீராங்கனையாக வாகை சூட வேண்டும் என்ற உறுதி கொண்ட நிர்மலா, காலில் ஏற்பட்ட காயத்தையும் பொருட்படுத்தாமல் போட்டியில் பங்கு கொண்டாள்.

4. உலகில் நடக்கும் எல்லாவற்றிற்கும் காரணம் இறைவனே

5. பெற்றோர், உறவினர்கள், உடன்பிறந்தவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்தால் பல இன்னல்களைக் களையலாம்.

6. வீட்டிற்கு வந்த அப்பாவிடம் கயல்விழி, நயமாகப் பேசி வெளியே செல்ல அனுமதி பெற்றாள்.

7. நண்பனுடன் ஏற்பட்ட வருத்தத்தினால் சக தொழிலாளர்களிடம் எரிந்து விழுந்தான் கோபி.

அவனன்றி ஓரணுவும் அசையாது

எய்தவன் இருக்க அம்பை நோவானேன்

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்

சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய வேண்டும்

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை

தனிமரம் தோப்பாகாது

முன் வைத்த காலைப் பின் வைக்காதே